IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# நீதி இலக் கியங்களில் வாழ்வியல் கூறுகள்

முனைவர் ப. ஜானகி

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை.

கம்பன் கலை மற்றும் மகளிர் அறிவியல் கல்லூரி,

திருவண்ணாமலை.

**முன்னுரை**:

மக்கள் தம் வாழ்க்கையில் மனத்தாலும் சொல்லாலும், செயலாலும், தூய்மை உடையவர்களாகவே வாழவேண்டும் என்பதே இலக்கியப் படைப்பாளர்களின் குறிப்பாக, அற நூல் இயற்றியவர்களின் நோக்கமாக உள்ளது. இதனை நுணுகியல் நோக்கமாகக்கொண்டு நீதி இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகளில், பொருண்மைகளை ஆய்ந்து விளக்குவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**சமதர்ம சமுதாயம்**:

வையத்துள் முறைப்படி வாழ்பவன் வானுறையும் தெய்வங்களுள் வைத்துப் போற்றப்பெறுவர். இதனை

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்”

(திருக்குறள் - 50)

உலக சமுதாயத்துள் தான் ஓர் உறுப்பினனாகக் கருதுகையில் தான் பிறருக்குப் பயன்பட வாழவேண்டும் என்ற உணர்வும், மக்கட் பண்பாகிய அன்பினையும், ஆர்வத்தையும், இரக்க உணர்வினையும் வளர்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பும் தோற்றங் கொள்ளும். மக்கள் தம் வாழ்க்கையில் ஊழுக்கும், அறிவிற்கும் இடையே அலைமோதப்படுகின்ற நிலையினைக் கொள்கின்றனர். ஊழ் ஒரு பக்கம் இருப்பினும் ஒருவன் தன் முயற்சியால் பெருமளவிற்கு ஊதியம் பெற எண்ணுதல் வேண்டுதல் என்பதனை.

"தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

(திருக்குறள் - 619)

என்று வள்ளுவர் கூறிக்காட்டுகின்றத் தன்மை அறியத்தக்கது.

ஒருவன் அறிய வேண்டுபவனற்றை அறிந்து ஆள்வினையின்றி வாழ்வதே பழி என்பதும், பயனைத் தருவதாய விதியில்லாமை ஒருவனுக்குப் பழயானது என்பதும் உணர்தல் வேண்டும் என்பதை,

"பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி"

(திருக்குறள் - 618)

மக்களாகப் பிறந்தவர்கள் பிறர் நலத்திற்காக வாழ வேண்டும் என்பதனை,

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை யுயிர்க்கு"

(திருக்குறள் - 231)

**தன்மான உணர்வு:**

தன்மான உணர்வு தலையாய ஒன்றாகும். மானத்தைப் பற்றிப் பரிமேலழகர் விளக்குகையில் எஞ்ஞான்றும் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர்வாழாமையுமாம் எனக் கூறிக் காட்டுதலைக் காணலாம்.

குடிப்பிறந்த மாந்தர் தம் உயர்ந்த நிலையை விட்டு அதனின்றும் தாழ்ந்த வழித்தலையை விட்டு அதனின்றும் வீழ்ந்த மயிரினையொப்பர் என்ற பொருளிலே,

"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை"

(திருக்குறள் - 964)

என வரும் குறட்பாவினைக் காணலாம் - மானத்தில் தமிழர்கள் உயிரையே வைத்திருந்தனர் என்பது,

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
ஊயிர்நீப்பர் மானம் வரின்".

(திருக்குறள் - 969)

தம் உடம்பிலிருந்து மயிர் நீங்கினால் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவர், மானம் கெட்டவரின் உயிரினைத் துறப்பர் என்பதாகும்.

"மானங்கெடவரின் வாழாமை முன் இனிதே"

என்று இனியவை நெறியின் வழக்கிழந்தவர் செயலை நறுந்தொகை இயம்புகிறது.

"இருவர்தஞ் சொல்லையும் எழுதரம் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மனுமுறை நெறியின் வழக்கிழந்தவர் தாம்
மனமுறை மறுகிநின் றழுத கண்ணீர்".

(நறுந்தொகை - 75)

ஏழுமுறை கேட்டு மனுநீதி வழியால் இருவரும் பொருந்த, இருவரும் ஒத்துக்கொள்ள சொல்லார் ஆனால், வழக்கினை இழந்தவர் மனமானது மிகவும் கலங்கி நின்று, அழுத கண்ணீரானது முறையாக மூன்று தெவர்களும் காக்கினும், சந்ததிமுழுவதையும் அறுப்பதாகிய ஒரு வாட்படையாகும்.

**துன்பம் விளைவிப்பவை:**

"கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
இல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்".

(மூதுரை-27)

கல்வியறிவில்லாத மக்களுக்கு, கற்றிந்தவருடைய உறுதிமொழி வாழைமரத்துக்கு அஃது ஈன்ற காயே இயமனாகும். இல் வாழ்க்கைக்குப் பொருந்தி நடவாத பெண் துன்பம் தரும் இயமனாவாள்.

கற்றிந்தவருடைய உறுதிமொழியினாலே கல்லாதவருக்கும், தருமத்தினாலே பாவிகளுக்கும் பொருத்தமில்லாத மனையாளாலே கணவனுக்குத் துன்பம் என்பது கருதத்தகும்.

**பாவிகளின் பணம்:**

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்தக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்".

(நல்வழி - 22)

பணத்தைப் பாடுபட்டு வருத்தி உழைத்துச் சேர்த்து உண்ணாமலும், அறஞ்செய்யாமலும் பூமியிலே புதைத்து வைத்து, தன்மை எல்லாவற்றையும் இழந்த மனிதர்களே கேட்பீர்களாக, உடம்பினை விட்டு உயிர் நீங்கிய பின்பு பாவிகளே அந்தப் பணத்தை இவ்விடத்து யாவர் அனுபவிப்பர். இதனை மூதுரை ஆசைகளினால் பயனில்லை எனச் சுட்டுவது ஒப்புநோக்கத்தக்கது.

"ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நால்வாழி- தோழி
நிதியுங் கணவனும் நேர்படினும் தந்தம்
விதியின் பயனே பயன்".

(மூதுரை-19)

ஆழமாகிய கடலின் நீரை அழுந்தும்படியாக அமிழ்த்தி மொண்டாலும், ஒரு படியானது நான்குபடி நீரை மொள்ளாது. தோழி மிக்க பொருளும் தக்க நாயகனும் கிடைத்தாலும் அவருடைய விதியின் பயனே பயன். பழவினையின் அளவின்றி மிகுதியால் அனுபவிக்கமுடியாது.

**பசித்துன்பம்:**

துன்பம் மிகுகின்ற என்னுடைய வயிறே, ஒரு நாளுக்குணவை விட்டிரு என்றால் விட்டிராய், இரண்டுநாளுக்கு ஏற்றுக்கொள்ள என்றால், ஏற்றுக்கொள்ளாய். ஒரு நாளிலாயினும். என்னுடைய வருத்தத்தை அறியாய். ஆதலினால் உன்னோடு கூடி வாழ்தல் எனக்கு அருமையாக இருக்கின்றது என நல்வழிச்சுட்டுகிறது.

"ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளுக்கு ஏலென்றால் ஏலாய்".

(நல்வழி - 11)

எனவும், நிலையாமை உணர்வைக் கூறி இறந்தவர் திரும்பி வருவதில்லை, நமக்கும் மரணமே வழியாகும். நாம் இறந்துபோமளவும். எமக்கு என்று பிச்சையிட்டு நீங்களும் உண்டு கவலையற்று இருக்க வேண்டும் என்பது கருதத்தகும்.

உணவு நிலையில் பசி மாற்றம் வந்தால் நம் தன்மை மாறிவிடும் என்பதனை,

"மானம் குலங்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை".

(நல்வழி - 26)

பசி நோய் வந்தால், மானமும், குலம், குடிப்பிறப்பும், கல்வியும், ஈகையும், அறிவுடைமையும் தானமும், தவமும், உயர்வும், தொழின் முயற்சியுமே, தேன்போலும் இனிமை பொருந்திய சொல்லை உடைய மங்கையர் மேல் ஆசை வைத்தலும் ஆகிய இப்பத்தும் விட்டொடிப்போம்.

**சிறந்த மாண்புகள்:**

"நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபாழ்
ஆறில்லா ஊருக் கழகு பாழ்".

(நல்வழி - 24)

விதியல்லாத நெற்றி பாழாகும். நேய்யில்லாத உணவு பாழாகும். நதில்லாத ஊருக்கு அழகு பாழாகும். மாறுபடாத சகோதரர் இல்லாத உடம்பு பாழாகும். இல்லறத்திற்குத் தக்க மனையில்லாத வீடு பாழாயேயாகும்.

"நெல்லுக்கு இறைத்த நீா் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்".

(மூதுரை-10)

நெற்பயிருக்கு இறைக்கப்பட்ட தண்ணீரானது, கால்வாய் வழியாகச் சென்று-அவ்விடத்திலுள்ள புல்லுகளுக்கும் கசிந்தூறும், பழமையான இவ்வுலகத்தில் நல்லவா் ஒருவா் இருப்பாராயின் , அவா் நிமித்தமாக அனைவருக்கும் மழை பெய்து நிற்கும். நல்லோரைச் சோ்ந்த எல்லோரும் பயனடைவா்.

**தாயின் மாண்பு:**

"சான்றோா் என்கை ஈன்றோட் கழகு".

(கொன்றைவேந்தன் - 27)

சான்றோா் என்கை தன் புத்திரரைக் கல்வியறிவால் நிறைந்தோா் என்று (பிறா்) சொல்வது ஈன்றோட்டு அழகாகும். தன்புதல்வரை அறிவுடையோா் என்று பிறா் சொல்லக் கேட்பது பெற்ற தாய்க்கு மகிழ்ச்சியாகும்.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சானறோன் எனக்கேட்ட தாய்"

(திருக்குறள் - 69)

தன் பிள்ளையைப் பண்பு நிறைந்தவன் எனப்பிறா் பாராட்டக் கேட்ட தாய், அவனைப் பெற்ற பொழுதினும் பெரிது மகிழ்வாள். இதனையே,

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை"

(கொன்றைவேந்தன் - 38)

தாயைப் பாா்க்கிலும், சிறப்புப் பொருந்திய ஓா் ஆலயமும் இல்லையாம். தாயைப் பாா்க்கிலும் சிறந்த கோயில் இல்லை. தாயைப் பூசித்தால் ஆலயத்தில் கடவுளைப் பூஜிக்கும் வரனை அடையலாம். தாயின் வாா்த்தையைத் தப்பினால் உறுதி பயக்கும் வேறு வாசகம் இல்லை என்பது பொருளாகும்.

**உவமையால் சிறப்பன:**

வாழ்வியல் உண்மைகளை உவமைகளின் வாயிலாக எடுத்து இயம்பும் தன்மையை மூதுரைப் பாடல்களில் காணலாம். தன்மையால் சிறந்து குணத்தை ஆராயும் பாடலாக,

“மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா”

(மூதுரை-11)

தாழை (தாழம்பு இதழ்களினாலே பெரிதாயிருக்கின்றது. மகிழம்பு இதழ்களினாலே சிறியதாயினும் மணத்தில் இனிதாயிருக்கின்றது. கடல் பெரிதாயிருக்கிறது. ஆயினும் அதிலுள்ள நீர் கழுவுவதற்குத் தக்க நீருமாகாது. அதன் பக்கத்தே சிறிய மனற்குழியிற் சுரக்கும் ஊற்று நீர் குடிக்கத்தக்க நீருமாகும். ஆதலினால் உருவத்தாற பெரியவர் குணத்தாற் சிறியவராதலும், உருவத்தாற் சிறியவர் குணத்தாற் பெரியவராதலும் உண்டு.

“உண்மை உறவினை விளக்குகையில்,
அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவை போல்
உற்றுழித் நீர்வார் உறவல்லர்”.

(மூதுரை-17)

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல வறுமை வந்தபொழுது, நீங்குவோர், உறவினர் ஆகார். அந்தக் குளத்தில் உள்ள கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போல நீங்காது சேர்ந்திருந்து வருத்தத்தை அனுபவிப்போரா உறவினராவர். வறுமை வந்த பொழுதும் சேர்ந்திருந்து துன்பம் அனுபவிப்பரே உறவினராவர்.

**முடிவுரை:**

மக்கட் பிறவியெடுத்த நிலையில் உருவத்தால் வாழ்வதால் பயனில்லை. உள்ளத்தாலும் உணர்வாலும், செயலாலும் தம் ஆளுமையை வெளிப்படுத்தி வாழ வேண்டும் என்பதே நீதி இல்கியங்கள் உணர்த்தும் சிறப்பாகும்.

**அடிக்குறிப்பு:**

1. திருக்குறள்- குறள் எண் 50
2. திருக்குறள்- குறள் எண் 619
3. திருக்குறள்- குறள் எண் 618
4. திருக்குறள்- குறள் எண் 231
5. திருக்குறள்- குறள் எண் 964
6. திருக்குறள்- குறள் எண் 969
7. நறுந்தொகை- பா.எண் 75
8. மூதுரை- பா.எண் 27
9. நல்வழி- பா.எண் 22
10. மூதுரை- பா.எண் 19
11. நல்வழி- பா.எண் 11
12. நல்வழி- பா.எண் 26
13. நல்வழி- பா.எண் 24
14. மூதுரை- பா.எண் 10
15. கொன்றைவேந்தன்- பா.எண் 27
16. திருக்குறள்- குறள் எண் 69
17. கொன்றைவேந்தன்- பா.எண் 38
18. மூதுரை- பா.எண் 11
19. மூதுரை- பா.எண் 17